JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **18/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 3** | Prosecution /Defence / Court | |
| Name | சதீஸ்குமார் | Village | சுள்ளிபாளையம்,<br>துடுப்பதி,<br>பெருந்துறை |
| Father's Name | பழனி | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 04.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். 19.12.2019 ம் தேதி காலை 5.30 மணிக்கு வழக்கம் போல் அ.சா.1 ற்கு சொந்தமான இருசக்கர வாகனமான Excel ல் வேலைக்குச் சென்ற போது உழவன் தோட்டம் ரோட்டில் புளியமரம் அருகில் போகும் போது ஆஜரில் உள்ள எதிரி லோகநாதன் அ.சா.1 யை வழி மறித்து அ.சா. 1 ன் முகத்தில் மிளகாய்ப் பொடியை தூவி விட்டு சங்கீதா கழுத்தில் அணிந்திருந்த தங்க செயினை பறித்து கொண்டு சென்று விட்டார். நான் மதுரை வீரன் கோவிலுக்கு சாமி கும்பிட போகும் போது அ.சா.1 சங்கீதா கோவில் பூசாரியிடம் கூறிவிட்டு என்னிடமும் நகைப் பறிப்பு சம்பவம் பற்றி கூறினார். அதன் பின்னர் நாங்கள் ஊர்க்காரர் அனைவரும் சேர்ந்து ஆஜர் எதிரி லோகநாதனை தேடிய போது எதிரி லோகநாதனை கண்டுபிடிக்க முடியவில்லை. அ.சா.1 சங்கீதாவை விசாரித்த 3 பவுன் எடையுள்ள தங்க செயின் என்று தெரிந்து கொண்டோம். அ.சா.1 சங்கீதாவை வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டு சங்கீதாவின் அண்ணன்

திருப்பூருக்கு வேலைக்குச் சென்று விட்டதால் அவரின் அண்ணன் வீட்டிற்கு வந்தவுடன் பெருந்துறை காவல் நிலையத்தில் மாலை புகார் அளித்ததின் பேரில் பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க எனக்கு தெரிந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** அ.சா.1 ம் நானும் நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் என்ன வேலை செய்து கொண்டு இருந்தேன் என்றால் வீட்டிலிருந்தேன். காலை 5 மணிக்கு கோவிலுக்கு சென்று விட்டேன். போலீசார் விசாரணையில் காலை 5 மணிக்கு கோவிலுக்கு சென்ற விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் போகும் போது எத்தனை பேர் அங்கு இருந்தார்கள் என்றால் கூட்டம் கூடி விட்டார்கள் பின்னிட்டு தான் நான் சென்றேன். யார் யார் இருந்தார்கள் என்றால் நானும் சதீஷ்குமார் பரமசிவம் மற்றும் ஊர்காரர்கள் இருந்தார்கள். சதீஷ்குமார் , பரமசிவம் சங்கீதாவுக்கு உறவினர்கள் என்றால் சரிதான். எதிரி லோகநாதன் எனக்கு உறவினர் என்றால் சரிதான்.

2. அ.சா.1 சங்கீதா குடும்பத்துக்கு எதிரியின் குடும்பத்திற்கும் முன்பகை இருந்து வந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. சங்கீதாவுக்கும், எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் பிரச்சனை இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடைபெறுவதற்கு முன்பாக எத்தனை ஆண்டுகள் சங்கீதாவும் எதிரியும் ஒன்றாக வேலைக்கு சென்றார்கள் என்றால் 2 –3 ஆண்டுகள் இருக்கும். அதற்கு முன்பாக அவர்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். அ.சா.1 சங்கீதா என்னென்ன நகைகள் போட்டு இருந்தால் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் கம்மலும் செயினும் அணிந்திருப்பார். கம்மலும், செயினும் எந்த டிசைனில் இருக்கும் என்றால் ஓரளவு தெரியும்.

3. போலீசார் விசாரணையில் டிசைன் பற்றி குறிப்பிட்டேனா என்றால் நார்மல் டிசைன் என்று குறிப்பிட்டேன். நான் சொன்னதை போலீசார் குறித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு எங்கு வைத்து என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றால் நாங்கள் 4 மணிக்கு புகார் கொடுத்தோம் காவல் நிலையத்தில் வைத்தே எங்களை விசாரித்தார்கள். நானும், அ.சா.1 சங்கீதாவும் கலந்து ஆலோசனை

செய்து புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். யார் யார் கலந்து கொண்டு பேசினோம் என்றால் நானும் சதீஷ்குமார், ஜீவரத்தினம் வளர்மதி ஆகியோர்கள் பேசினோம். பேசிய படி தான் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான்.

4. அ.சா.1 சங்கீதா நல்ல நிலையில் தான் இருந்தார் மிளகாய்ப்பொடி தூவியதால் ஒரு மாதிரியாக இருந்தார் அண்ணன் வந்த பின்னிட்டு புகார் கொடுக்கலாம் என்று தெரிவித்தார். சம்பவம் நடந்த இடமும் கோவிலுக்கும் எவ்வளவு தூரம் என்றார் சுமார் 200 அடி தூரம். நான் வரும்பொழுது 5.30 மணிக்கு சங்கீதா கோவிலுக்கு வந்து விட்டார் என்றால் சரிதான். சங்கீதா சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் நாங்கள் அனைவரும் கலந்து ஆலோசனை செய்து பொய் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. சங்கீதாவுக்கும், எதிரிக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. போலீசார் விசாரணைக்கு வரும்போது முகத்தில் பட்ட மிளகாய் பொடி சுத்தம் செய்து விட்டு வந்து விட்டோம். துணியில் மிளகாய் பொடி பட்டதை காண்பித்தோம். துணியை போலீசார் வாங்கிக் கொண்டார்களா என்றால் இல்லை. அ.சா.1 என் தங்கை என்பதால் எதிரி மீது இருக்கும் வன்மத்தால் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

அரசு தரப்பில் சாட்சி அ.சா. பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது).